**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC**.141/2020 |
| Prosecution Witness | : | அ.சா.4 |
| Name | : | சுந்தரவடிவேல் |
| Father's/Husband Name: | : | செல்லமுத்து |
| Address : | : | 78, தெற்கு தெரு, நக்கசேலம், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் |
| Age | : | 42/2023 |

தேதி: 19/07/2023

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.(1 **முதல் 7 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு** 317 **ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் துறையூரில் மகேந்திரா டிராக்டர் நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 07.03.2015 அன்று மதியம் 3.00 மணியளவில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த செல்வராஜ் என்பவரும் எங்கள் ஊர் பஸ் ஸ்டாப்பில் வைத்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எங்களுக்கு எதிர் திசையில் பெரம்பலூர் குற்றப்பிரிவை சேர்ந்த காவல் ஆய்வாளரும் 2 போலீசாரும் மூன்று பேரை விசாரித்தனர். அதில் ஒருவர் பெயர் பொன்னர். நாங்கள் பக்கத்தில் இருந்ததால் போலீசார் அழைத்தனர். அதனால் நாங்கள் சென்றோம். அப்போது நில மோசடி சம்மந்தமாக புகார் கொடுத்து

இருப்பதாகவும், என கூறி பொன்னரிடம் விசாரணை செய்தனர். அப்போது மதிவாணன் என்பவரிடமிருந்து பொன்னன் பணத்தை வாங்கியதாக ஒப்புக்கொண்டு அவர் கையில் வைத்திருந்த பையில் இரண்டு 20 ரூபாய் பத்திரங்களையும் ஒரு கம்ப்யூட்டர் சிட்டாவையும் எடுத்து ஒப்படைத்தார். அதை ஒப்புதல் வாக்குமூலமாக அவர்கள் பதிவு செய்து ஆவணங்களை கைப்பற்றினர். அதற்கு சாட்சியாக நானும் செல்வராஜீம் கையொப்பம் இட்டோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகளுக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை என்பதால் விசாரணை முடித்து கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

Digital